# 2016 நவம்பர் 16ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2016-11-16

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

## பத்திரங்கள் சமர்ப்பித்தல்

(i) 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வி ஆணைக்குழு
(ii) 2014 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
(iii) 2013 ஆம் ஆண்டுக்கான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
(iv) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள்

(v) 2015 ஆம் ஆண்டுக்கான கல்வி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## மனுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினரினால் பொதுமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

(i) கௌரவ விஜித ஹேரத்
(ii) கௌரவ மயில்வாகனம் திலகராஜா - இரண்டு மனுக்கள்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

## இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்

**ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) - இரண்டாம் மதிப்பீடு (ஒத்திவைப்பு விவாதம்)** (இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் 1 ஆம் இலக்க விடயமாகக் காணப்படுவது)

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்திற்காக ஒதுக்கப்பட்ட நான்காம் நாள் இன்றாகும்.

## ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை

"தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிலையங்களிலுள்ள ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு" தொடர்பான ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, 1840 மணியளவில் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம், 2016 நவம்பர் 17ஆந் திகதி வியாழக்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

[வரவு செலவுத் திட்டம் 2017]

** இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.*